


முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (26.2.2026) சென்னை, தியாகராயர் நகரில் உள்ள இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமை அலுவலகமான பாலன் இல்லத்திற்கு நேரில் சென்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் தகைசால் தமிழர் மறைந்த தோழர் ஆர்.நல்லகண்ணு அவர்களின் உடலுக்கு மலர் வளையம் வைத்து, செவ்வணக்கம் செலுத்தினார். இந்நிகழ்வின்போது, திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி, அமைச்சர் எ.வ.வேலு, மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர் வைகோ, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் டி.ராஜா, விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல்.திருமாவளவன், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவரும், சட்டமன்ற உறுப்பினருமான கு.செல்வப்பெருந்தகை, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் மு.வீரபாண்டியன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் பெ.சண்முகம், முன்னாள் அமைச்சர் சட்டமன்ற உறுப்பினர் முனைவர் க. பொன்முடி, நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.ராசா, பெருநகர சென்னை மாநகராட்சி நிலைக்குழு தலைவர் நே.சிற்றரசு, தமிழ்நாடு கொங்கு இளைஞர் பேரவையின் நிறுவனத் தலைவர் தனியரசு, தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பு மாநிலத் தலைவர் ஏ.எம். விக்கிரமராஜா, இந்திய கம்யூனிஸ்ட் மற்றும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிகளைச் சார்ந்த நிருவாகிகள் உடனிருந்தனர்.

### தகைசால் தமிழர் நல்லகண்ணு உடலுக்கு

# 72 குண்டுகள் முழங்க அரசு மரியாதை!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் ‘வீர வணக்கம்’ என முழக்கமிட்டார்!

சென்னை, பிப்.27 –

**மறைந்த தகைசால் தமிழர் விடுதலைப் போராட்ட வீரர் தோழர் ஆர்.நல்லகண்ணு அவர்களின் திருவுடலுக்கு முழு அரசு மரியாதையுடன் பிரியா விடை அளிக்கப்படும் என தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்திருந்தார்.**

**இதனைத் தொடர்ந்து தகைசால் தமிழர் நல்லகண்ணு அவர்களின் உடலுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இறுதி அஞ்சலி செலுத்தினார். தகைசால் தமிழருக்கு வீரவணக்கம், செவ்வணக்கம் என முதல மைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முழக்கமிட்டார். மேலும் 72 குண்டுகள் முழங்க நல்லகண்ணு அவர் களின் உடலுக்கு அரசு மரியாதை செலுத்தப்பட்டது. சென்னை தியாகராய நகரில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தலைமை அலுவலகத்தில் இந்நிகழ்ச்சி நடைபெற்றது.**

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் தோழர் ஆர்.நல்லகண்ணு அவர்கள் மறைவுற்ற செய்தியை அறிந்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தனது வேதனையும், வருத்தத்தையும் தெரிவித்துள்ளதோடு, மறைந்த தோழர் ஆர்.நல்லகண்ணு அவர்களின் குடும்பத்தினர், நண்பர்கள் மற்றும் கம்யூனிஸ்ட் இயக்க தோழர்களுக்கு தனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொண்டிருந்தார்.

தோழர் ஆர்.நல்லகண்ணு அவர்கள் இந்திய சுதந்திர போராட்டம், விவசாயிகள் போராட்டம், தீண்டாமைக்கு எதிரான போராட்டம் மற்றும் பாட்டாளி வர்க்கத்தின் நலனுக்காக என தனது வாழ்நாளில் பெரும்பகுதியை போராட்டம், சிறை வாழ்க்கை என அர்ப்பணித்துக் கொண்டவர். பொதுவுடமை கருத்திலும், திராவிட கருத்தியலும் கொண்டு, தொழிலாளர் நலன் மற்றும் எளிய வாழ்வின் சான்றாக திகழ்ந்த அந்த மாமனிதருக்கு 2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசானது தகைசால் விருதை வழங்கி பெருமைப்படுத்தியது.

தோழர் ஆர்.நல்லகண்ணு அவர்களுக்கு 2007 ஆம் ஆண்டு அப்போதைய தமிழக ஆளுநர் சுர்ஜித் சிங் பர்னாலா அவர்கள் சகாயோகி விருதினையும், அதே ஆண்டு தமிழ்நாடு அரசு அம்பேத்கர் விருதினையும் வழங்கி அன்னாரை பெருமைப்படுத்தியது.

விடுதலைப்போராட்ட வீரராக மாபெரும் சமூக செயற்பாட்டாளராக மற்றும் அரசியல் கட்சித் தலைவராக அவர் இந்திய நாட்டிற்கும், தமிழ்நாட்டிற்கும் ஆற்றிய தொண்டினை போற்றும் விதமாக அவரது திருவுடலுக்கு முழு அரசு மரியாதையுடன் பிரியாவிடை அளிக்கப்படும் என முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்திருந்தார்.

# ஆற்றல்மிக்க கழக மாவட்டச் செயலாளர்களின் கவனத்திற்கு...!

## தேர்தல் அறிக்கை தயாரிப்புக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி எம்.பி. அறிவிப்பு!



கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்களின் திராவிட மாடல் நல்லாட்சி தொடர்ந்திடும் வகையில், 2026 சட்டமன்றத் தேர்தலுக்கான தி.மு.க. தேர்தல் அறிக்கையைத் தயாரிப்பதற்காக அமைக்கப்பட்டுள்ள குழுவினர், தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களுக்கும் சென்று நேரில் ஆலோசனைகளைப் பெற்று வருவதுடன், இணையதளம் வாயிலாகவும் பொதுமக்களின் கோரிக்கைகளைப் பெற்று வருகிறோம்.

பொதுவானவாக்குறுதிகளுடன் அந்தந்த மாவட்டங்களில் நிறைவேற்றப்பட வேண்டிய திட்டங்கள் குறித்த வாக்குறுதிகளைத் தனித்தனியே வழங்குவதும், ஆட்சிக்கு வந்தவுடன் அவற்றை நிறைவேற்றுவதும் கழகத்தின் வழக்கமாக உள்ளதால், மாவட்டக் கழகச் செயலாளர்கள் தாங்கள் முக்கியமாகக் கருதும் கோரிக்கைகளுடன், அவரவர் கழக மாவட்டங்களுக்குட்பட்ட ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள் மற்றும் தங்கள் மாவட்டங்களில் உள்ள விவசாயிகள், பொது நல அமைப்பினர், வர்த்தகர்கள், தொழில் முனைவோர், மாணவர்கள் உள்ளிட்ட பல தரப்பினரிடமிருந்தும் இதுவரை பெறப்படாமல் விடுபட்டுள்ள கோரிக்கைகளைப் பெற்று, அவற்றில் முதன்மையாக நிறைவேற்றப்பட வேண்டியவற்றை வரிசைப்படுத்தி, மாவட்டக் கழகச் செயலாளரின் கடிதத் தலைப்புத் தாளில் (Letter head) கழகத் தேர்தல் அறிக்கை தயாரிப்புக் குழுவிற்கு விரைந்து அனுப்பி வைத்து, திராவிட மாடல் 2.0 வெற்றியினை உறுதி செய்திடுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

**கனிமொழி கருணாநிதி எம்.பி.**
கழக தேர்தல் அறிக்கை தயாரிப்புக் குழுத் தலைவர்
கழக துணைப் பொதுச் செயலாளர்

### கழகத் தலைவரின் பிறந்தநாளை சிறப்பாகக் கொண்டாடுவோம்!

# மீண்டும் ‘திராவிட மாடல்’ ஆட்சி அமைய பாடுபடுவோம்!

## இரா.இராஜீவ் காந்தி தலைமையில் நடந்த மாநில மாணவரணி நிர்வாகிகள் கூட்டத்தில் தீர்மானம்!

*சென்னை, பிப்.27-*

*கழக மாணவரணி செயலாளர் இரா.இராஜீவ் காந்தி தலைமையில் நடைபெற்ற மாநில மாணவரணி நிர்வாகிகள் கூட்டத்தில் கழகத் தலைவரின் பிறந்த நாளை மிகச் சிறப்பாகக் கொண்டாட வேண்டும் என்றும், மீண்டும் திராவிட மாடல் ஆட்சி அமைய பாடுபடுவோம் என்பது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.*

*அதன் விவரம் வருமாறு:-*

*முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் அறிவுறுத்தலில் இளந்தலைவர் அவர்களின் வழிகாட்டுதலில் கழக மாணவர் அணியின் மாநில நிர்வாகிகள் கலந்தாலோசனைக் கூட்டம் நேற்று 26.02.2026 வியாழக்கிழமை காலை 12.00 மணி அளவில் சென்னை அண்ணா அறிவாலயத்தில் உள்ள கலைஞர் அரங்கத்தில் மாநில மாணவரணி செயலாளர் இரா.இராஜீவ் காந்தி தலைமையில் மாநிலத் துணைச் செயலாளர்கள் மன்னை த.சோழராஜன், சேலம் இரா.தமிழரசன், அதலை பி.செந்தில்குமார், தமிழ் கா.அமுதரசன், வி.ஜி.கோகுல், திருமதி பூர்ணசங்கீதா சின்னமுத்து, ஜெ.இராமகிருஷ்ணன், ஆர்.சுரேஷ்குமார் முன்னிலையில் கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பிறந்த நாள், தமிழ் மாணவர் மன்றம், மாணவர் அணியின் அடுத்தகட்ட ஆக்கப் பணிகள் குறித்த ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.*

*இந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்*

**தீர்மானம் - 1**

**கழகத் தலைவர் அவர்களுக்கு நன்றி**

*தமிழ்நாட்டைக் கல்வியில் இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக ஆக்கியதோடு, சிறப்புக் கூட்டுப் பயிற்சிகள் மூலம் ஒன்றிய அரசின் கல்வி நிறுவனங்களில் அரசுப் பள்ளி மாணவர்கள் தேர்ச்சி பெறும் வகையில் சாதனையை நிகழ்த்திக்காட்டியிருக்கும் கழகத் தலைவர், முதலமைச்சர் அவர்களுக்கு இக்கூட்டம் தனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது.*

**தீர்மானம் - 2**

**கழகத் தலைவர் அவர்களின் பிறந்தாள் கொண்டாட்டம்**

*கழகத் தலைவர், முதலமைச்சர் அவர்களின் 73வது பிறந்த நாளை கழக மாவட்டந்தோறும் மாணவர் அணி சார்பில் கொண்டாடும் பொருட்டு நிகழ்ச்சிகளை ஒருங்கிணைத்து நடத்திட இக்கூட்டம் தீர்மானிக்கிறது.*

**தீர்மானம் - 3**

**மீண்டும் திராவிட மாடல் 2.0 அமைய உழைத்தல்**

*2026 சட்டமன்றத் தேர்தலில் கழகத் தலைவர் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் 2.0 ஆட்சியை மீண்டும் அமைத்து கழக இளந்தலைவர் அவர்களின் கரங்களை வலுப்படுத்த கழக மாணவர் அணி திண்ணைப் பிரசாரங்கள், நான் முதல்வன், தமிழ்ப்புதல்வன் திட்டங்களை மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி கழக மாணவர் அணி பொறுப்பாளர்கள் மூலம் தமிழ் மாணவர் மன்றத்தின் மூலம் கொண்டு சேர்த்து தேர்தல் பணியாற்றிட இக்கூட்டம் முடிவு செய்கிறது.*

*இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.*

### அரசு கல்லூரிகளில் பணிபுரியும் தற்காலிக

# கவுரவ விரிவுரையாளர்களுக்கு கூடுதலாக ரூ.5 ஆயிரம் ஊதிய உயர்வு!

## அமைச்சர் முனைவர் கோவி. செழியன் அறிவிப்பு!



*சென்னை, பிப்.27-*

*அரசு கல்லூரிகளில் பணிபுரியும் தற்காலிக கௌரவ விரிவுரையாளர்களுக்கு கூடுதலாக ரூ.5,000 ஊதிய உயர்வு வழங்கி உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன் அறிவித்துள்ளார்.*

*முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி அரசு கலை, அறிவியல் கல்லூரிகளில் பணிபுரியும் தற்காலிக கௌரவ விரிவுரையாளர்கள், அரசு பொறியியல் கல்லூரிகளில் பணிபுரியும் தற்காலிக உதவிப்பேராசிரியர்கள், அரசு பாலிடெக்னிக் கல்லூரிகளில் பணிபுரியும் தற்காலிக விரிவுரையாளர்கள் என அனைவருக்கும் 01.03.2026 முதல் கூடுதலாக ரூ.5,000 ஊதிய உயர்வு வழங்கப்படும் என உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன் தெரிவித்துள்ளார்.*

*இது குறித்து உயர்கல்வித் துறை அமைச்சர் கோவி. செழியன் தெரிவித்துள்ளதாவது:-*

*தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான இவ்வரசு எப்பொழுதும், அரசு ஊழியர்களுக்கும் மாணாக்கர்களுக்கும் துணை நின்று செயலாற்றி வருகிறது. அவர்களின் நலன் பேணுவதில் உறுதியுடன் செயல்பட்டு வந்திருக்கிறது. இவ்வகையில் நமது முதலமைச்சர் அவர்கள் உயர்கல்வி பயிலும் மாணாக்கர்களுக்கு பல்வேறு உன்னதத் திட்டங்களை வழங்கி உள்ளார்.*

*இந்திய அளவில் மட்டுமல்லாமல் உலக அளவில் நமது மாணாக்கர்கள் முதன்மை பெற வேண்டும் என்று “நான் முதல்வன்” திட்டத்தில் திறன் மேம்பாட்டு பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. தற்போது உலகம் உங்கள் கையில் என்ற நிகழ்வின் மூலம் மடிக்கணினிகள் வழங்கப்பட்டுள்ளன.*

*மேலும், ஆராய்ச்சியை மேம்படுத்த முதலமைச்சரின் ஆராய்ச்சி ஊக்கத் தொகை, ஆய்வகங்களை மேம்படுத்த நிதி, தலைசிறந்த வெளிநாட்டு பல்கலைக்கழகங்களுக்குச் சென்று பயில நடவடிக்கை போன்றவற்றை மாணாக்கர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. ஆசிரியர்களுக்கும் பல்வேறு நிலைகளில் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.*

*தமிழ்நாடு முதலமைச்சரின் ஆணைக்கிணங்க கிராமப்புற மாணாக்கர்களின் உயர்கல்வித் தேவையினை பூர்த்தி செய்யும் நோக்கில் 2021-26 ஆம் ஆண்டில் 38 புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் தொடங்கப்பட்டுள்ளன. இதனால் 18,760 மாணாக்கர்கள் கூடுதலாக பயனடைந்துள்ளனர். அதேபோல், 250க்கும் மேற்பட்ட புதிய பாடப்பிரிவுகளும் தொடங்கப்பட்டுள்ளன. 2015-ஆம் ஆண்டிற்குப் பிறகு உதவிப்பேராசிரியர் பணியிடங்கள் நிரப்பப்படாமல் இருந்த நிலையில், கழக அரசு பொறுப்பேற்றவுடன் 4,000 உதவிப் பேராசிரியர்கள் நியமனம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.*

*பல்வேறு நீதிமன்ற வழக்குகளினால் மேல்நடவடிக்கை தாமதமான நிலையில், தற்போது 2,708 உதவிப் பேராசிரியர் பணியிடங்களை நிரப்பிட ஆசிரியர் தேர்வு வாரியத்தின் மூலம் முதன்மை தேர்வுகள் நடத்தப்பட்டு, தற்போது 5 பாடப்பிரிவுகளுக்கு உதவிப்பேராசிரியர்களை தேர்வு செய்ய நேர்காணலுக்கு அழைக்கப்பட்டுள்ளனர். மீதமுள்ள பாடப்பிரிவுகளுக்கும் விரைவில் நேர்காணலுக்கு அழைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.*

*மாணாக்கர்களின் கல்விச் சேவை எவ்வகையிலும் பாதிக்கப்படக்கூடாது என்பதற்காக அவ்வப்போது கௌரவ விரிவுரையா ளர்கள் நியமிக்கப்படுகின்றனர். மேலும், 2016-இல் இருந்து உயர்த்தப்படாமல் இருந்த இவர்களின் ஊதியம் 2022ல் ரூ.15,000லிருந்து ரூ.20,000 ஆக உயர்த்தி வழங்கப்பட்டது. பின்னர், மீண்டும் 2 ஆண்டுகளிலேயே (2024ல்) ரூ.25,000 ஆக உயர்த்தி வழங்கப்பட்டது.*

*தற்போது மீண்டும் ரூ.25,000லிருந்து ரூ.30,000 ஆக உயர்த்திட தமிழ்நாடு முதலமைச்சர் ஒப்புதல் அளித்துள்ளார். அதன்படி, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி கௌரவ விரிவுரையாளர்கள் மற்றும் அரசு பொறியியல் கல்லூரி தற்காலிக உதவி பேராசிரியர்கள் 01.03.2026 முதல் மாதம் ரூ.30,000 ஊதியம் பெறலாம். அதேபோல் அரசு பாலிடெக்னிக் தற்காலிக விரிவுரையாளர்களுக்கு ரூ.20,000லிருந்து ரூ.25,000 ஆக உயர்த்தி வழங்கப்படும். இதனால் அரசுக்கு, ஆண்டிற்கு ரூ.53 கோடி கூடுதல் செலவினம் ஏற்படும்.*

*அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி கௌரவ விரிவுரையாளர்கள் 8,741 பேர், அரசு பொறியியல் கல்லூரி தற்காலிக உதவி பேராசிரியர்கள் 319 பேரும் மற்றும் அரசு பாலிடெக்னிக் கல்லூரி தற்காலிக விரிவுரையாளர்கள் 586 பேர் ஆகமொத்தம் 9,646 தற்காலிக ஆசிரியர்கள் இதன் மூலம் பயனடைவர்.*

*மேலும், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 2025 -26ஆம் கல்வியாண்டில் தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் பகுதியில் தொடங்கப்பட்ட அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கு “முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் மு.கருணாநிதி அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, திருவிடைமருதூர்” என பெயர் மாற்றம் செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.*

*இதற்கு எனது சார்பாகவும், திருவிடைமருதூர் தொகுதி மக்கள் சார்பாகவும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், துணை முதலமைச்சர் அவர்களுக்கும் நன்றியினை தெரிவித்துக்கொள்கிறேன்.*

*இவ்வாறு உயர்கல்வித் துறை அமைச்சர் கோவி. செழியன் தெரிவித்துள்ளார்.*

# என் இனிய தமிழ் சொந்தங்களே!




இது எப்படி இருக்கிறது தெரியுமா? ரேடியோ நாடகத்தில் ஊமை வேஷம் போட்டவனோட கதி தான். குந்தி எழுந்திருக்கவே முடியாத கிழவி. இமயத்தின் உச்சிக்கு நடந்து போய் கொடியேற்றிட விரும்பிய கதைதான்! ஆகவே 2026 இல் நடக்கப் போகும் தேர்தல் ஆரிய திராவிட யுத்தமே! வாக்காளர்கள் இதனை மனதில் நிறுத்திக் கொண்டு வாக்களிக்க வேண்டும்!

இந்தியை எதிர்ப்போம், இந்தியாவை காப்போம்! ஆன்மீக மதம் கொண்ட ஆரியத்தை தோற்கடித்து திராவிட மாடல் அரசியல் மூலம் ஏழ்மையை விரட்டி சுதந்திர ஒளியை, ஜனநாயக உரிமைகளை கடைக்கோடி இந்திய குடிமகனின் இல்லம் வரை கொண்டு சேர்ப்போம்.

இதற்கு ஒரே வழி முத்துவேல் கருணாநிதி ஸ்டாலினை மீண்டும் அமோக வெற்றி மூலம் ஆட்சியில் அமர வைப்பது தான்!

அண்மையில் சேக்கிழார் எழுதிய ராமாயணத்தில் ரெண்டு வரிகள் என் பார்வையில் பட்டன. ஒன்று; எட்டப்பனார் வழியிலே எடப்பாடியார்! இன்னொன்று. சொந்த புத்தி இருந்தால் கண்டுபிடி; மந்த புத்தி இருந்தால் காப்பியடி. ஸ்டாலின் அவர்கள். குடும்பத்துக்கு 5000 என்றார். உடனே காப்பி மன்னன் பத்தாயிரம் என்றார். இத்தகைய அறிவு மேதை உடன் ஆரியம் கூட்டணி வைத்து திராவிடக் கோட்டையை தகர்க்கப் போகிறதாம்!



**வி.சி.குகநாதன்**
திரைப்பட இயக்குனர்

### கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி

# மூத்த சகோதரர் சாய் சுந்தர் மறைவு!



சென்னை, பிப். 27-

தி.மு.கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அவர்களின் மூத்த சகோதரர் ஆர்.சாய் சுந்தர் (வயது 81) அவர்கள், வயது மூப்பின் காரணமாக உடல்நலக் குறைவு ஏற்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில், நேற்று (26.02.2026) பிற்பகல் 1.00 மணியளவில் சிகிச்சை பலனின்றி மறைவெய்தினார்.

அன்னாரது உடல் சென்னை, கலைஞர் கருணாநிதி நகர், 11வது செக்டார், (நீல்கிரீஸ் சூப்பர் மார்க்கெட் அருகில்) 69வது தெரு, கதவிலக்கம் 895ல் உள்ள அவரது இல்லத்தில் வைக்கப்பட்டுள்ளது.

இன்று (பிப்ரவரி 27) மாலை 3.00 மணியளவில் இறுதிச் சடங்கு நடைபெறுகிறது.

மறைந்த ஆர்.சாய் சுந்தர் அவர்களுக்கு கீதா என்ற மனைவியும் டாக்டர் சாய் அருண் என்ற மகனும் உள்ளனர்.

### திருவள்ளூர் மேற்கு மாவட்டச் செயலாளர்

# திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ. சகோதரர் எஸ்.விஸ்வநாதன் (எ) ரவி மறைவு!

## கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, பிப்.27-

திருவள்ளூர் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ.வின் சகோதரர் எஸ். விஸ்வநாதன் என்கிற ரவி அவர்கள் நேற்று 26.2.2026-வியாழக்கிழமை அன்று காலை இயற்கையெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

இச்செய்தியறிந்ததும் கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது ஆழ்ந்த இரங்கலை சகோதரரை இழந்து வாடும் திருத்தணி எஸ்.சந்திரன் உள்ளிட்ட அவரது குடும்பத்தினருக்கு தெரிவித்துள்ளார்.